# நெருக்கடியான காலகட்டத்தில் கலை மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் இணைவு: கோவிட்-19 சூழலில் வட இலங்கையில் மெய்நிகர் நாடக ஆற்றுகைகள்

# The Fusion of Art and ICT in Times of Crisis: Online Theatre Performances in Northern Sri Lanka in the Context of COVID-19

கலாநிதி ஜனனீ தேவானந்த் / Dr. Janani Thevananth[1]
கலாநிதி தேவநாயகம் தேவானந்த் / Dr.Thevanayagam Thevananth[2]

Date of submission: 2024-10-11
Date of acceptance: 2024-11-15
Date of Publication: 2024-12-30
Corresponding author's Name:
Kishanthiny Thiruchchelvam
Email: tkishanthiny@univ.jfn.ac.lk

**Abstract**

Theatrical performances create a direct, emotional connection with the audience, a connection only possible when both performers and viewers meet in the same physical space. However, with the global lockdown announced in 2020, this norm became entirely unfeasible. In this context, the Active Theatre Movement operating in the Northern region of Sri Lanka, with the aid of information and communication technology (ICT), transitioned to online theatre performances, exploring new approaches. This study examines how, during the COVID-19 pandemic, virtual theatre performances, integrated with ICT, reached audiences. It investigates how innovative experiences were created for viewers across borders and how connections were established with them. The Performative Theory proposed by Mary Gergen and Kip Jones is employed to explore the potential of live theatre through virtual video streaming technology and the emotional impact it generated. The study further investigates the impact of online theatre performances, conducted from Northern Sri Lanka, on Tamil diaspora families worldwide. The transformation of these performances through online communication technology served as a key means of connecting Tamil cultural identity and as a relational tool to engage remote Tamils. Additionally, the study highlights the significant role of online communication technologies in strengthening socio-cultural ties among the Tamil diaspora. The Relational Aesthetics theory, proposed by French art theorist Nicolas Bourriaud, serves as the philosophical foundation of this study. Data was collected through the researchers' own auto-ethnographic experiences. This study uncovers new methods of reinforcing Tamil identity through online theatre performances, even in challenging global circumstances, contributing to the creation of new dimensions in art and social science.

**Keywords:** Online Performance; Relational Aesthetics; Performative Theory; Digital Communication; ICT in Crisis Situation

---

[1]The author is a senior lecturer in the Department of Financial Management, University of Jaffna. jananit@univ.jfn.ac.lk

[2]The author is a Director, Muttam, Human Resources Development Organization. tthevananth@gmail.com

## 1.0 அறிமுகம்

நாடகம் என்பது பொதுவாக மேடையில் காட்சிப்படுத்தப்படுவதற்காக உருவாக்கப்படும் ஒரு இலக்கிய வடிவமாகும். இது மனிதர்களின் உறவுகள், சமூகவியல், கொள்கைகள் மற்றும் ஒழுக்கவியல் போன்றவற்றை பேசுகிறது. நாடகம் பெரும்பாலும் உரையாடல்களையும் செயல்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டதாகும். நாடகம் மக்களை ஆவலுடன் ஈர்க்கும் வகையில் உணர்ச்சி மற்றும் அறிவுசார்ந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறது. இது சோகம் நகைச்சுவை மகிழ்ச்சி போன்ற உணர்வுகளை வெளிக்கொணர்வதோடு பல வடிவங்களில் வெளிப்படுத்தப்படும். (Lavender, 2008).

மெய்நிகர் நாடகம் என்பது டிஜிட்டல் தளங்களில் காட்சிப்படுத்தப்படுவதற்காகவே வடிவமைக்கப்பட்ட நாடகங்களைக் குறிக்கிறது. இது ஒலி- காட்சி தொழில்நுட்பங்களையும் தொலைதொடர்பு தொழில்நுட்பத்தையும் பயன்படுத்துகிறதுஇ உதாரணமாக Zoom போன்ற ஸ்ட்ரீமிங் தளங்களில் நாடகங்களை உலகளாவிய பார்வையாளர்களுக்குக் கொண்டு செல்வதற்கான வழியாகிறது. Covid-19 பெருந்தொற்றின் போதுஇ ஆன்லைன் நாடகம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. இதன் மூலம் மக்கள் குழுவினருடன் கலைத் தொடர்புகளை உருவாக்கிஇ நாடகத்தின் மெய்யான காட்சியமைப்பை நிகழ்நிலையில் முழுமையாக வழங்க முயன்றது (Kozinn, 2021; Hussin & Bianus, 2022).

மேலும் மெய்நிகர் நாடகம் ஹைபிரிட் மாடல்களை மேம்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளது. இதில் நேரடி காட்சிகளும் டிஜிட்டல் ஒளிபரப்புகளும் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இது நாடகத்திற்கான அணுகலை வளர்த்ததுடன், உலகளாவிய அளவில் பார்வையாளர்களை ஈர்க்க உதவியது (Matsumoto, 2017). நடப்பு ஆண்டுகளில் ஆன்லைன் நாடகங்களின் வளர்ச்சி நாடகக் கலைகளை மறுமலர்ச்சி பெறச் செய்து வருகிறது. குறிப்பாகஇ ஊழுஏஐனு-19 பெருந்தொற்றின் போதுஇ இணையதள நாடகங்கள் படைப்பாற்றலின் முக்கிய தளமாக மாறியது. இந்த புதிய வடிவம் நாடகத்தின் உண்மையான வண்ணத்தையும்இ அதை அனுபவிக்கும் முறையையும் மறுதிறனாக்குகிறது.

மலேஷியாவில் நாடகக் கலைகளை பாதுகாக்க "ஹைபிரிட் நாடகம்" என்ற நடைமுறையை பரிந்துரை செய்துள்ளது. இது மெய்நிகர் மற்றும் நேரடித் தொடக்கங்களை ஒன்றிணைத்திருக்கிறது (Hussin & Bianus, 2022). டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மூலம் நாடகங்கள் காட்சியமைப்பிலும் கதைகளின் விளக்கங்களிலும் புதுமைகளை எளிதாக்கியுள்ளது. டெலிமாட்டிக் நாடகங்கள் இத்தகைய ஒரு முக்கிய முன்னேற்றம் ஆகும் (Lavender, 2008).

மெய்நிகர் நாடகங்கள் சமூகங்களுடன் இணைந்திருக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் போது பல சவால்களைச் சந்திக்கின்றன. உதாரணமாக, "Highland Park Is Here" நாடகம் இணைய தளத்தின் சிக்கல்களைச் சந்தித்தாலும் தொடர்ந்து சமூகத்துடன் இணைவதை முன்னெடுத்தது (Kozinn, 2021). நாடகமும் காணொலி தொழில்நுட்பமும் கடந்த 30 ஆண்டுகளில் இணைந்துள்ளன. இவை மெய்நிகர் நாடகங்களின் மேடையை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன (Matsumoto, 2017).

இந்த மெய்நிகர் நாடகப் பரிமாற்றங்கள் நாடகத்தின் நேரடி அனுபவத்தை மாற்றியமைக்கின்றது இது புதிய தொழில்நுட்பத்துடனும் நாடகத்தின் நேரடித் அளிக்கையை இணைக்கும் முயற்சியாகும்.

### 1.1 கோவிட் 19 உலகெங்கும் தொழில்முறை அரங்கை முடக்கியது.

பிரிட்டன் உலகில் முதன்மையான தொழில்முறை அரங்கப்பண்பாட்டைக் கொண்ட நாடாகும். புறிட்டன் முழுவதும், ஒரு சாதாரண ஆண்டில், சுமார் 1,100 அரங்குகள் 34 மில்லியனுக்கும் அதிகமான பார்வையாளர்களை ஈர்க்கின்றன, இந்தத் துறை வருடமொன்றிற்கு 1.8 பில்லியன் டாலர் வருவாய் ஈட்டுகிறது. லண்டனின் வெஸ்ட் எண்ட் நியூயார்க்கின்

பிராட்வே இரண்டும் உலகின் முதல் இரண்டு தொழில்முறை நாடகத்தயாரிப்புக்களுக்கான நாடக இடங்களாகும். மேலும் பிரித்தானிய அரங்கு பரந்த கலைத்துறையில் ஒரு முக்கிய இயந்திரமாகும். இங்கு தான் நாட்டின் பல திரைப்பட இயக்குநர்கள், திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நடிகர்கள் மற்றும் எழுத்தாளர்கள் தங்களது படைப்பாற்றல் வாழ்க்கையை தொடங்கினர்.

தொழில்முறை அரங்கக் கலைஞர்களின் வாழ்க்கை எப்போதும் ஆபத்தானதாகவே காணப்படுகின்றது. அரங்கு தொழில்முறையாக சாதகமான நிலையில் உள்ள பிரித்தானியா மற்றும் அமெரிக்காவில் முழுநேர அரங்கக்கலைஞர்களின் நிலை நிரந்தரமற்றதாக ஆபத்தானதாகவே இருக்கிறது. இலங்கையில் தமிழ் அரங்கைப் பொறுத்தவரை முழுநேர அரங்கக்கலைஞர்கள் என்ற நிலையை இனங்காண முடியவில்லை. இந்தியாவில் தெருக்கூத்துக் கலைஞர்கள் மற்றும் இசைநாடகக்கலைஞர்கள் தொழில்முறையாக தமது வருமானத்திற்காக நாடகக்கலையில் பயணிக்கிறார்கள். அவர்களின் வாழ்வாதாரம் கோவிட் 19 தாக்கத்தால் பாதிக்கப்பட்டு மிகவும் துயரமான நிலையில் வாழ்ந்தார்கள்;. குறிப்பாக இசை நாடகம் போன்ற நாடகத்துறைகளில் இதனைக்காணலாம்.

பிரிட்டனில் தொழில்முறை அரங்கு கோவிட் 19 காலகட்டத்தில் இழுத்து மூடப்பட்டது. மார்ச(2020); நடுப்பகுதியில் இருந்து, நாடக ஆற்றுகைகள் நிகழ்கின்ற அதாவது வருடம் முழுவதும் ஆற்றுகைகள் நிகழ்ந்து கொண்டிருந்த கட்டிடங்கள் மூடப்பட்டன (Nicholls, 2020).

பிரிட்டனில் தொழில்முறை அரங்குகளுக்காக உள்ள நூற்றுக்கணக்கான பெரிய சிறிய அரங்குகளின் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், லைட்டிங் மற்றும் சவுண்ட் இன்ஜினியர்கள் மற்றும் பிற மேடை மற்றும் முன் தயாரிப்பு ஊழியர்கள் வேலையில்லாது திண்டாடினார்கள் (Rurale, Azzolini, Ivanova & Fagundes, 2020) அவர்களின் துயரக்கதைகள் ஊடகங்களில் பகிரப்பட்டன. கோவிட் 19 காலகட்டத்தில் ஒரு தியேட்டர் கட்டிடத்தை பராமரிக்க குறைந்தபட்சம் நிதி இல்லாத நிலைமையில் சில அரங்க நிறுவனங்கள்;, தமது தயாரிப்புக்களை நேரடியாக மெய்நிகர் வெளியில் ஒளிபரப்புவதன் மூலம் இழந்த வருமானத்தில் சிலவற்றை புதுப்பிக்க முயற்சித்திருந்தார். பிரிட்டனின் நேசனல் தியேட்டர் அதன் உன்னதமான தயாரிப்புகளில் சிலவற்றை கட்டணமின்றி மெய்நிகர் வெளியில் ஒளிபரப்பியது. "மெய்நிகர்; நாடகங்களுக்கு ஒரு 5 பவுண்டுகள் கடடணம் வசூலிக்க சிரமப்பட்டதன்; காரணமாக நாடகப்படைப்புக்களை மெய்நிகர் வெளியில் இலவசமாக காண்பித்திருந்தார்கள் (Jacobson, 2020).

கொரோனா தொற்றுநோய் காரணமாக - பிரிட்டனின் நேரடி அரங்கம் கடுமையான ஆபத்தில் இருந்தது. "இது ஒரு இருத்தலியல் நெருக்கடி" என்று அரங்கத்துறைசார்ந்தவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் பிரிட்டன் அரசாங்கம் அரங்கத்துறைக்கு உதவ முன்வந்துள்ளது. ஏராளமான தியேட்டர்கள் நொடிந்து போகும் அபாயத்தை தவிர்ப்பதற்காக அரங்கத் தொழிலாளர்களின் ஊதியத்தை வழங்க அரசாங்கம் முன்வந்தது. கொரோனா வைரஸ் நெருக்கடியை எதிர்கொள்ள உதவும் வகையில் பிரித்தானிய அரசாங்கம் கிட்டத்தட்ட 2 பில்லியன் டாலர்களை கலைத்துறைக்கு ஒதுக்கியிருந்தது. ஆகவே அரங்கு வாழ்வதற்கு அதற்கான சூழலும் அரச ஆதரவும் தேவைப்படுகின்றது (Rurale, Azzolini, Ivanova, Fagundes & 2020). இருப்பினும் பிரிட்டன் போன்ற நாடுகளே கொரோனா நெருக்கடியில் அரங்கை தக்கவைத்துக் கொள்ள சிரமம்பட்டன.

இலங்கையில் தமிழர் பகுதிகளில் வளர்ந்து வரும் அரங்கிற்கு அரச ஆதரவு எப்போதும் இருந்ததில்லை. இதனால் தொழில்முறை அரங்கின் வளர்ச்சி எப்போதும் ‘சாண் ஏறி முழம் சறுக்கும்’ நிலைமையாகவே இருக்கிறது. இங்கு அரங்க நிறுவனங்கள் பல பகுதிநேர அமச்சூர் குழுக்கலாகவே செயற்படுகின்றன. ஆவ்வாறன ஒரு நிறுவனம் தான் செயல் திறன் அரங்க இயக்கம். இது 2003 ஆண்டிலிருந்து செயற்பட்டுவரும் அரங்க நிறுவனம். ஆரங்கை தொழில்முறையாகக் கொண்டு வர வேண்டும்

என்ற முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது. வருடாந்தம் நல்லூர் நாடகத் திருவிழாவை நடத்தி வருகிறது. தனக்கென ஒரு பார்வையாளர் கூட்டத்தைக் கொண்ட அரங்க நிறுவனமாகக் காணப்படுகிறது. இந்த நிறுவனம் கொரோனாக்காலகட்டத்தில் மூடபபட வேண்டியதாகிறது. இதில் தனது பார்வையாளர்களின் விரும்பம், வேண்டுகோளின் காரணமாக உலகெங்கும் கொரோனா – 19 காரணமாக மூடப்பட்ட காலகட்டத்தில் ஏலவே தயாரித்த நாடகங்களை மெய்நிகர் வழி நிகழ்த்துவதற்கு தீர்மானித்தது.

இதற்காக 2021 காலகட்டத்தில் ZOOM செயலி வழி நான்கு நாடகங்களை ஆற்றுகை செய்தது. இந்த முயற்சிகள் தகவல் தொழில்நுட்ப மட்டுப்பாடுகளுக்கு மத்தியில் யாழ்பல்கலைக்கழக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விரிவுரையாளரின் தொழில்நுட்ப உதவியுடன் நிகழ்த்தப்பட்டது. இது உள்ளுர் பார்வையாளர்களை மட்டுமன்றி யாழ் மாவட்டத்திற்கு வெளியே உள்ள பார்வையாளர்களையும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களையும் சென்றடைந்தது. ஒரு நெருக்கடியான காலகட்டத்தின் அரங்க அளிக்கை மட்டுப்படுத்தப்பட்ட பார்வாயளர்கள் என்ற நிலையிலிருந்து பரந்து பட்ட உலகலாவிய பார்வையாளர்களை சென்றடைந்திருந்தது. இதனைத் தொடர்ந்து ஐந்து புலம்பெயர் நாடுகளைச் சேர்ந்த தமிழ்ச் சிறுவர்கள் மெய்நிகர் வழி நாடகப்பயிற்சியைப் பெற்று தத்தமது நாடுகளில் இருந்து ஒரு மெய்நிகர் நாடகத்தை மேடையேற்றியிருந்தனர்.

### 2.1 ஆய்வு வினாக்கள்

1. COVID-19 நெருக்கடியின் போது அரங்க நிறுவனம் தமது நாடக ஆற்றுகைககளை எவ்வாறு மெய்நிகர் தளத்திற்கு மாற்றியமைத்தன?

2. மெய்நிகர் நாடக ஆற்றுகைகள்; உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களை எவ்வாறு கவர்ந்தது. அது ஏற்படுத்திய தமிழ் அடையாளம் சமூக-கலாச்சார மற்றும் உளவியல் தாக்கங்கள் என்ன?

3. ஏதிர்காலத்தில் மெய்நிகர் அரங்கை எவ்வாறு வளர்த்தெடுப்பது? ஆதற்கு தேவையாள சாதகமான நிலைமைகள் என்ன?

### 2.2 ஆய்வு முறையியல்

நாடகமும் அரங்கியலும் துறையில் நிகழ்த்து கலைகளை பதியும் போதும் மதிப்பிடும் போதும் புதிய அணுகு முறைகள் தேவைப்படுகின்றன. இங்கு கலையும் சமூக அறிவியலும் இணைந்து பதிய வழிமுறைகள் பற்றிச் சிந்தித்தாக வேண்டும். இவ்வாறான இணைவு ஏலவே உள்ள கலைத்தத்துவக் கோட்பாடுகளை சவாலுக்கு உள்ளாக்குகிறது எனலாம். கலை சார்ந்த ஆய்வில் புதிய பார்வைகள் உருவாக்கப்பட வேண்டும்.

இன்று கலைகள் (படங்கள், வீடியோக்கள், பாடல்கள்) மற்றும் புதிய ஊடகங்கள் (வலைப்பக்கம் CD-Rom,DVD) மூலம் மக்களிடம் சென்று சேர்கின்றன. அதே வேளை அறிவையும் உறவையும் வளர்க்கின்றன. இதனால் புதிய பல்தொகை (polyvocal) அணுகுமுறைகள் சமூக அறிவியலுக்குள் புகுத்தப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது சமூக அறிவியலை விரிவுபடுத்தி, கலாபூர்வமான படைப்புகளைப் பகிர்ந்து கொள்ளும் சிறப்பை வழங்க முடியும். பாரம்பரிய அறிவியல் முறைகளை மாற்றி, புதுமையான அறிவியல் கண்டுபிடிப்புகள் கலை மற்றும் சமூகத் துறைகளில் விரிவடைய வேண்டும். இங்கு, பிரெஞ்ச் கலை அளிப்பாளர் நிக்கோலஸ் பூர்ரியாட் முன்மொழிந்த "Relational Aesthetic" (re)presentationகோட்பாடு சமூக அறிவியலின் புதிய வழிகளுக்கு உதவும்.

கலை அழகியல் என்பது (re)presentation என்பதை அடிப்படையாகக் கொண்டே நோக்கப்படுகின்றது. கலைத்துறையின் அழகியல் கோட்பாடுகள் இதனையே வலியுறுத்துகின்றன. அதே வேளை 18ஆம் நூற்றாண்டின் "உண்மை" மற்றும் "அழகு" தொடர்பான புரிதல்கள் 20ஆம் நூற்றாண்டில் சவால்களுக்கு உள்ளாகின. ஆகவே அவற்றை சமூகத்தின் அடிப்படையில் மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும். சமூக கட்டமைப்பியல்

(Social Constructionism)) புதிய மதிப்புகள் மற்றும் நம்பிக்கைகளின் அமைப்புகளில் மாற்றம் வேண்டப்படுகின்றது. நிக்கோலஸ் பூர்ரியாட் முன்மொழிந்த "Relational Aesthetics"" கோட்பாடு, மனித உறவுகள் மற்றும் சமூக சூழல்களில் கலைக்கான அடிப்படை இடங்களை மனித உறவுகள், சந்திப்புகள், கூட்டணிகள், நிகழ்வுகள், மற்றும் மகிழ்ச்சியான இடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகும் "மாறுபாடு" கலை (Relational) மையமாக வைக்கப்பட்டுள்ளது. பூர்ரியாட் கூறுவதுபோல், கலை சமூக பரிமாற்றங்களால் உருவாகும் பொருள். இதை எவ்வாறு சமூகத்திலிருந்து வேறுபடுத்திய ஒன்றாக எப்படி பிரதிபலிக்கலாம் என்ற கேள்வி எழுகிறது.

கலை-அடிப்படையில் (re)presentation மீள்படைப்பு தான் அது எவ்வாறு சமூகத் தொடர்பற்றதாக இருக்கமுடியும் என்பதை அவர் தனது கருத்தாக முன்வைக்கின்றார். இதனால் கலைசார்ந்த படைப்புக்கள், அணுகுமுறைகள் பல்வேறு துறைகளை இணைக்கும் அடிப்படையாக இருக்க முடியும் என்ற கருத்து முனைப்பு பெறுகிறது. நிக்கோலஸ் பூர்ரியாட் (Nicolas Bourriaud) தனது வாழ்க்கை வரலாறு சார்ந்த எடுத்துரைப்பாக (Narrative) தனது அனுபவத்தை விவரிக்கின்றார். இதில், ஆராய்ச்சி அறிக்கை ஒரு "நிகழும் ஊடகம்" (Dynamic vehicle) ஆக மாற முடியும். இதன் மூலம் வாழ்க்கை வரலாறு சமூக ஆய்வியல் (Biographic sociology) துறைக்கு புதிய கலைகளின் உதவியுடன் பலன்கள் கிடைக்கின்றன. மேலும், ஆராய்ச்சியாளரும் எடுத்துரைப்பவரும் (Narrative) தெரிவிப்பவரும் இணைந்து ஆவணங்களை உருவாக்குவதற்கான வாய்ப்புகள் உருவாகின்றன.

நிக்கோலஸ் பூர்ரியாட் (1998) தனது Relational Aesthetics நூலில் கலைநடத்தை மனித உறவுகள் மற்றும் சமூக சூழல்களில் புதுப்பிக்கும் விதமாக விளக்குகிறார். கலை என்பது பாரம்பரிய வடிவங்களைத் தாண்டி, சமகால சமூக சூழல்களை பிரதிபலிக்கும் மாறுபட்ட மற்றும் ஆழமான மனித தொடர்புகளின் மூலம் அர்த்தங்களை உருவாக்க வேண்டும் என்பதே இதில் மையக்கருத்தாக உள்ளது. குறிப்பாக நவீன ஊடகங்களை (New Media) பயன்படுத்துதல், ஒலிப்பதிவு மூலம் கதைகளைப் பதிவு செய்தல், அல்லது தரவுகளை காட்சிப்படுத்துதல் போன்ற பல்வேறு வழிகளை பரிந்துரைத்தார்.

சமூக விஞ்ஞானங்கள், தனது தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் முறைகளில் கலைகளை பயன்படுத்துவதன் மூலம் தனிச்சிறப்புடன் பார்வையினை விரிவாக்கலாம். இது கலை மற்றும் அறிவியல் இரண்டுக்கும் இடையே ஆழமான ஒருங்கிணைப்புகளை உருவாக்கும். 50 அல்லது 100 ஆண்டுகள் பழமையான அளவுகோல்களை இந்த முறைமைகளில் பயன்படுத்துவது பொருத்தமாகாது. "Performative" பணிகள் உள்ளூர் சமூகங்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன, மாற்றத்தை ஏற்படுத்துகின்றன, அல்லது மகிழ்ச்சியான சூழலை உருவாக்குகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். இங்கு கலை வெளிப்பாடுகள் மூலம் பார்வையாளர்கள் எவ்வாறு அவர்களின் அனுபவங்களை உருவாக்குகிறார்கள் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். Mary Gergen & Kip Jones (2008) நிகழ்த்துதல் கோட்பாட்டை முன்வைக்கிறார் "Performative" சமூக அறிவியல் (PSS) மூலம், ஆராய்ச்சியாளர்களுக்கு நேர்த்தியான, சுயதாராளமான, மற்றும் புதுமையான அணுகுமுறைகளை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது.

இந்த அணுகுமுறை கலைச் செயற்பாட்டை "நம்பச் செய்வது" அல்ல, தூண்டுதல் மற்றும் ஆர்வமூட்டுதல் ஆக மாறுகிறது. இதனை கலைஞர்களின் ஒத்துழைப்பின் மூலம்,; விரிவான பொருளாக்கத்தை பெறமுடியும். இது தகுந்த அளவுகோல்களை மீள்பார்க்கவும், சமூக அறிவியலின் வெளிப்பாட்டில் கலைகளின் பங்கு முக்கியமானது என்பதை புரியவும் உதவுகிறது இந்த உரை சமூக அறிவியலில் "Performative" (நிகழ்த்தல் சார்ந்த) அணுகுமுறையின் முக்கியத்துவத்தை மற்றும் கலைமுறைகளின் பங்களிப்பை ஆராய்கிறது. இது சமூக விஞ்ஞானிகள் தங்கள் பணி மற்றும் விளக்க முறைகளை மேம்படுத்த கலைவழிகள் எவ்வாறு

உதவுகின்றன என்பதை விவரிக்கிறது. கலைஞர்கள் எளிய வரைபடங்கள் மூலம் தங்கள் எண்ணங்களை தொடங்குவார்கள்; ஆனால், அவர்களின் நேரத்தின் பெரும்பகுதியை தங்கள் காட்சிப்படையல்களை உருவாக்குவதில் செலவிடுவார்கள் செயல்முறைதான் (process) அவர்களின் படைப்பாற்றலின் மூலதனம். இதேபோல சமூக ஆராச்சியாளர்கள் "செய்வதன் மூலம் கற்றல்" என்ற எண்ணத்திற்கு தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

அதாவது ஆராய்ச்சியாளர்களுக்கு "அறியாமையை" (not knowing) ஏற்கும் பண்பையும், தங்களை அடிமட்டத்தில் நின்று புதியது கற்றுக்கொள்ளும் உழைப்பும் தேவைபடுகிறது.

சிறந்த பார்வையைக் கற்றுக்கொள்வது. செவிமடுக்க மிகச் சிறந்த திறனைப் பயிற்சி செய்வது தங்கள் உடலை புரிந்து கொள்ளுதல், கலை மற்றும் கலாச்சாரத்தின் பங்களிப்பை புரிந்து கொள்ளும் திறனைப் பெற்றிருகக் வேண்டும். Kylie Minogue போன்ற பிரபலங்களின் கலைநிகழ்ச்சிகள் மூலம் தங்கள் படைப்பாற்றலுக்கு உத்வேகம் பெற்றதாக குறிப்பிடுகிறார், அதேசமயம் Judit Butler போன்ற தத்துவகருதுக்களை ஒப்பிடுகின்றார். இவ்வுரையாடல் Relational Aesthetics மற்றும் PSS (Performative Social Science) முறைகளில் அணுகுமுறையை சுதந்திரமாக அணுகுவதின் அவசியத்தை வலியுறுத்துகிறது. இது மனித உறவுகளை மற்றும் பார்வையாளர்களின் பங்களிப்புகளை மையமாகக் கொண்டு, கலை மற்றும் அறிவியலின் தொடர்புகளை விரிவாக்குகிறது. படைப்புகளின் அர்த்தவியல் தொடர்புள்ளவர்களின் பங்களிப்பால் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே முக்கியமான கோட்பாடாக முன்வைக்கப்படுகிறது.

### 3.0 ஆய்வு தகவல் அளிக்கையும் பகுப்பாய்வும்

கொரோனா தாக்கம் மிகவும் உச்சநிலையில் இருந்த 2021 காலகட்டத்தில் உலகெங்கும் பொது முடக்கம் அறிவிக்கப்ட்டிருந்த போது இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்து இயங்கி வந்த செயல் திறன் அரங்க இயக்கமும் பொது முடக்க நிலையில் காணப்பட்டது. இதனால் வருடாந்தம் நடத்துகின்ற நல்லூர் நாடகத் திருவிழாவை நடத்த முடியவில்லை.தமது வருடாந்த தயாரிப்புக்களோடு பார்வையாளர்களை தொடர்பு கொள்ள முடியவில்லை என்ற நிலைமை காணப்பட்டது. இந்தக் காலகட்டத்தில் இணையவழியாக வீட்டிலிருந்தபடி வேலை, படிப்பு, கூட்டங்கள் கலந்துரையாடல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. துகவல் தொடர்பாடலில் அதீத தேவை உணரப்பட்டது. ZOOm,Google Meet போன்ற செயலிகள் தொடர்பாடலை ஆக்கிரமித்துக் கொண்டன. இந்தச் சூழலில் செயல் திறன் அரங்க இயக்கத்தின் பார்வையாளர்களை மெய்நிகர்வழி தொடர்பு கொள்வது பற்றிச் சிந்திக்கப்பட்டது. செலவு குறைந்த இலகுவாக அணுகக்கூடிய தொழில்நுட்பம் பற்றிச் சிந்திக்கப்பட்டது. இதற்கான வழிகளை ஆராய்ந்த போது யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் தகவல் தெடர்பாடத்துறையின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி தே.ஜனனீ தொழில்நுட்ப உதவிகளை தான் வழங்கமுடியும் என்ற அடிப்படையில் முதல் கட்டமாக ணுழழஆ செயலியைப்பயன்படுத்தி எவ்வாறு ஆற்றுகை செய்வது என்று ஆலோசித்தோம். ஆதன் பயனாக மெய்நிகர் ஆற்றுகைகளை இலங்கை தமிழ் அரங்கப்பரப்பில் அறிமுகமாகின.

1. ஆற்றுகையாளர்கள் ஒரு இடத்தில் ஒன்று கூடி ஆற்றுகையை நிகழ்த்தும் போது அதனை வெப்காம் வீடியோ ஸரீமிங் மூலம் ஒளி ஒலி பரப்புதல். இதற்கு ணுழழஆ செயலி பயன்படுத்தப்பட்டது. முதலில் மட்டுப்படுத்தப்பட்ட 100 பார்வையாளர்களுக்கான ணுழழஆ வசதி பெறப்பட்டது. இதில் அதிகளவானவர்கள் இணையமுயற்சித்து இணையமுடியாமைகாரணமாக ஆற்றுகையைப்பார்க்க முடியவில்லை. இதில் 10★10 அடி அளவு அறையில் முதலில் ‘வண்டியும் தொந்தியும்’ என்ற எள்ளல் சுவையுடைய நாடகம் மேடையேற்றப்பட்டது. இதன் போது இரண்டு நடிகர்கள் மட்டும் நடித்திருந்தார்கள். இங்கு ஆற்றுகை வெளி என்பது வெப்காம் பதிவு

செய்யும் அளவு சார்ந்ததாகவே காணப்பட்டது. இது ஒரு மட்டுப்பாடானதாக இருந்தது. ஒளியமைப்பு மேற்கொள்ளபபட்டதால் ஆற்றுகை மிகத் தெளிவாகப் வெப்காம் ஊடாக ஒளிபரப்ப முடிந்தது. லைவ் மியூசிக் பயன் படுத்தப்பட்டது. றொபேட் இந்த இசையை வழங்கினார். இங்கு பொது முடக்க காலகட்டத்தில் முகக்கவசங்களை அணிந்தபடி ஒரு குறுகிய பகுதியில் நெருக்கமாக நின்று இந்த ஆற்றுகையை மேற்கொண்டிருந்தோம். ஒவ்வொரு வீடுகளிலும் தங்கள் கொம்பியூட்டர் முன்பாக இருந்து நான்கு ஐந்து பேர் பார்த்தார்கள். வீட்டில் முடங்கியிருந்தவர்களுக்கு இந்த மெய்நிகர் ஆற்றுகை சிறந்த பொழுது போக்காக அமைந்தது. சிலர் தமது சிமார்ட் ரி.வியை தமது கைபேசி அல்லது லப்டொப் உடன் இணைத்து ரி.வியில் தமது குடும்பத்தினருடன் இணைந்து மெய்நிகர் ஆற்றுகையைப் பார்த்தார்கள். முதல் நிகழ்வில் கிட்டத்தட்ட 400 – 500 பேர் உலகெங்கும் இருந்து வட்டியும் தொந்தியும் மெய்நிகர் நாடகத்தைப் பார்த்தார்கள். இந்த நாடகம் அதிகாரிகளை எள்ளி நகையாடுகிறது. வெறுமனே கதிரைகளிலிருந்து தமது தொந்திகளை வளர்த்து சோம்பேறிகளாகி ஏதும் செய்யாது இருக்கும் அதிகாரிகளால் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்பதை ஆற்றுகை வெளிப்படுத்தியிருந்தது. மெய்நிகர் நாடக முடிவில் கலந்துரையாடலுக்கும் வாய்பேற்பட்டது. பலரும் தற்போது யாழ்ப்பாணத்தில் அதிகாரிகள் எவ்வாறு பணியாற்றுகிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இந்த நிலைமையை மாற்ற என்ன செய்யலாம் என்பதாக தமது கருத்துக்களை முன்வைத்தார்கள். இதில் ஒலித்தடை ஒரு பிரச்னையாக இருந்தது. வெப்காம் பின்னால் இருந்து லைவ் மியூசிக், பின்னணி குரல் போன்றன தெளிவில்லாமல் இருந்தது குறைபாடக இருந்தது. மேலும் இதில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மிக அவசியமாகியது. திரையில் நாடகக்காட்சி தெரிவதற்கு ஏனையவர்களின் ஒலிவாங்கியை நிறுத்திவைக்க வேண்டியிருந்தது. அதே போல போன்ற முறைகளில் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப்பயன்படுத்த வேணடியிருந்தது. இதற்காண இணைய இயைப்பிற்கு மொபைல் WIFI பயன்படுதப்பட்டது. இந்த இணைய வசதியில் சற்றுத் தாமதமாகவே பார்வையாளரைச் சென்றடைவதான தொழிலநுட்பத் தடங்கல் உணரப்பட்டது. இவற்றிற்கு நடுவே மெய்நிகர் ஆற்றுகை வெற்றிகரமானதாகவே அமைந்திருந்தது.

2. இரண்டாவது ஆற்றுகை ஒலிப்பிரச்னைகளை தவர்ப்பதற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாட்டி பொம்மைகள் நாடகத்தை மெய்நிகர்வழி மேடையேற்றினோம். இது சற்று இலகுவானதாக அமைந்தது. தமிழர் பாரம்பரியமாக சொல்லப்பட்ட வந்த பாட்டி வடைசுட்ட கதையை இந்த நாடகம் சற்று வரிவாக்கம் செய்து பாடல்கள் உரையாடல்களாக இசையுடன் ஒரு 40 நிமிட ஆற்றுகையாக நிகழ்த்தியிருந்தார்கள். இது சிறுவர்களை மிகவும் கவர்ந்திருந்தது. இதனைத் தொடர்ந்து நடநத உரையாலில் பெற்றோர்கள் பலர் தமது சிறுவர்களுக்கு இணையவழி நாடகம் பழக்க முடியுமா என்று கேட்டார்கள். அதனைத் தொடர்ந்து மெய்நிகர்வழி பயிற்சி வழங்கப்பட்டது. இதன் முடிவில் அதில் பங்கு கொண்ட சிறுவர்கள் பாட்டி நாடகத்தை வெவ்வேறு நாடுகளிலிருந்து ஒரே நேரத்தில் நேரலையாக நடித்து வேறொரு பரிமானத்துக்கு மெய்நிகர் நாடகத்தை கொண்டு சென்றார்கள்.

3. மூன்றாவதாக மரணச்சான்றிதள் என்ற ஓராள் ஆற்றுகை இலங்கையில் இறுதியுத்தம் நடைபெற்ற 2009 காலகட்டத்தில் இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் பலர் காணாமல் போனார்கள். இவ்வாறு காணாமல் போன இளம் குடும்பத்தவர், அவரது மனைவி அவரை தன்கண்முன்னாள் இராணுவத்திடம் ஒப்படைத்துச் செல்கிறாள். புறன்னர் அவரைக்காகணவில்லை. அவரைத்தேடி இராணுவமுகாம்களாக திரிகிறாள் ஆணைக்குழுக்கள் முன்பாக சாட்சி சொல்கிறாள் கணவன் வருவான் என்று ஏங்கித்தவிக்கிறாள். அவளது காத்திருப்பு தொடர்கிறது. ஒரு நாள் தபால் மூலம் ஒரு கடிதம் வருகிறது, உங்கள் கணவர் இறந்ததாக கருதி அவரது இறப்பை உறுதி செய்து மரணச்சான்றிதழ் தருகிறோம்.

மரணச்சான்றிதழ் கிடைத்தால் நீங்கள் நிவாரண உதவிகள் பெறலாம் என்று அதில் தெரிவிக்கப்படுகின்றது. ஆந்தக்கடிதத்தைப்பார்த்ததும் ஆவேசம் கொண்டவளாக 'எனது கணவர் இறக்கவில்லை அவர் இறக்கவும் மாட்டார்' என்று கடிதத்தை கிழித்து எறுகிறாள். அது பல்கிப்பெருகி மேடைமுழுவதும் நிரம்புகிறது என்பதாக இந்த நாடகம் நிறைவடையும் . இது ஓராள் மட்டுமே பல்வேறு பாத்திரங்களாக மாறி மாறி நடிக்கின்ற நாடகம். இதனையும் ஊழமழஅ செயலி வழியாக ஆற்றுகைசெய்தார்கள். இப்போது பார்வையாளர் அதிகரித்ததால் 500 பேருக்கான செயலி கணக்கு பதிவு செய்து நிகழ்த்தப்பட்டது. இசை, பின்னணிக்குரல் என்பன நேரலையாக நிகழ்த்தப்பட்டன தனியொருவர் உரையாடி, ஆடிப் பாடி நாடகத்தை நிகழ்த்தியிருந்தார். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் பலரை இந்த நாடகம் மிகவும் கவர்ந்திருந்தது.

4. நான்காவது மற்றும் இறுதியான நாடகமாக ஏகாந்தம் நாடகம். இது இலங்கையில் யுத்தத்தினால் தமது தாய் தந்தையரை தனியே விட்டு வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தவர்களை மிகவும் உணர்ச்சிரீதியாக பாதிப்பதான நாடகமாக அமைந்திருந்தது. 40 நிமிடங்கள் கொண்ட இந்த நாடகம் முழு வேடமுகங்களை அணிந்து நடிகர்கள் நடிப்பதாக அமைந்திருக்கும். இதில் பதிவு செய்யப்பட்ட உரையாடல்கள் பாடல்கள் சத்தங்கள் காணப்படும். இதன் ஆற்றுகையில் ஒலி தெளிவாக அமைந்திருந்தது. தமது தனிமையில் இருக்கும் தாய்தந்தையரை நினைத்து மிகவும் ஒன்றுபட் மனநிலையில் இந்தப்பார்வையாளர்கள் காணப்பட்டார்கள்.

Mary Gergen & Kip Jones (2008) கருத்துக்கமைவாக "performative" சமூக அறிவியல் (PSS) மூலம், நேர்த்தியான, சுயதாராளமான, மற்றும் புதுமையான அணுகுமுறைகளை பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது. ஒரு நெருக்கடியான சூழலில் முடக்கப்பட்டிருக்கும் மக்கள் கூட்டம் தனது மக்கள் கூட்டத்துடன் தொடர்பினைப் பேணுவதற்கு தகவல் தொடர்பாடல் தொழிலநுட்பத்தைப்பயன்படுத்துகின்ற அதே வேளை அந்தத் தொடர்பு புதுமையான வழிமுறைகள் மூலம் அமையும் போது அது நெருக்கமான ஆழமான தொடர்பைப்பெறுவதோடு தொடர்பியலில் புதிய உத்வேகத்தைக் கொடுக்கிறது. அதே வேளை சுழல் புதிய கலைப்படைப்பபை உருவாக்குகிறது. அது அந்தச்சூழலில் மிக முக்கியமானதாக காணப்படுகின்றது.

இதனையே நிக்கோலஸ் பூர்ரியாட் (1998) தனது Relational Aesthetics என்று குறிப்பிடுகிறார். கலைநடத்தை மனித உறவுகள் மற்றும் சமூக சூழல்களில் புதுப்பிக்கும் விதமான தொடர்பியலைக் கொடுக்கிறது. கலை என்பது பாரம்பரிய வடிவங்களைத் தாண்டி, சமகால சமூக சூழல்களை பிரதிபலிக்கும் மாறுபட்ட மற்றும் ஆழமான மனித தொடர்புகளின் மூலம் அர்த்தங்களை உருவாக்க வேண்டும் என்ற அவரது கருத்து கொரோனா 19 காலகட்டத்தில் மெய்நிகர் அரங்காற்றுகைகள் மெய்ப்பித்திருக்கின்றன. இங்கு இந்தக்கருத்தை நாடகத்தை மெய்நிகர்வழி பார்த்தவர்கள் பலர் வெளிப்படுத்தியிருந்தார்கள்.

கொரோனா – 19 காலகட்டத்தின் சூழல் மெய்நிகர் ஆற்றுகைகளை தோற்றுவித்தாலும் அது புலம்பெயர்ந்தோர் மத்தியில் அவர்களின் தாயக நினைவுகளை மீட்டதோடு காலச்சார பிணைப்பையும் முறள்வலியுறுத்தியிருந்தது. இதனையே Performative Theory வலியுறுத்துகிறது.

ஜமுனா இந்திரகுமார (2021) பாடலில் கையாண்ட "பூவரசம் இலையில் போட்டு தட்டை வடை சுடுகிறார்" என்ற இவ்வரிகள்இ நாம் ஊரில் இருந்த போது இருந்த பூவரசமர வேலிகளையும் இஅதில் பூவரசம் இலைகளைப் பறித்து நாதஸ்வரம் செய்து ஊதிவிளையாடும் நிகழ்வுகளையும் என் கண்முன்னே கொணர்ந்தது. ஏன் பூவரசம் இலையில் வடை சுடும் முறைகூட தற்போது மாறிவிட்டதே!!.' ஆத்துப்பறக்க விடியக்காத்தால' போன்ற சொற்களை இப்போ கேட்பதில்லை. இம்மொழிகளைஇ இந்நாடகத்தில் கையாண்ட விதமும் நாடகபிரதியை வளப்படுத்தி நிற்கிறது என்றே சொல்லலாம்.

இங்கு நாடகம் பற்றிய பார்வை மாற்றம் பெறுகின்றது. அதனது அழகியல் கோட்பாடு வேறுபடுகின்றது. புரதிநிதித்துவப்படுத்தல் என்பது வேறொரு அர்த்தத்தைத் தருகின்றது. சுழலுடன் தொடர்புடையதான அழகியல் என்பது இங்கே பொருத்தப்பாடானதாக இருப்பதைக்காணலாம். பாட்டி நாடகத்தை நெருக்கடியான நிலைமையில் கிடைத்த தொழிநுட்பமூடாக ஈழத்துக் கலைஞர்களையும் சிறுவர்களையும் புலம்பெயர் மக்களையும்; அவர் தம் சிறுவர்களையும் இணைத்து பொம்மைகள் ஊடாக எம்மை மகிழ்வித்த செயல் திறன் அரங்க இயக்கத்தினருக்கும் அவர்களுடன்; பங்கு கொண்ட கலைஞர்களுக்கும் நன்றிகளும் வாழ்த்துகளும். அத்துடன் இந்த நாடகம் பொம்மைகள் இன்றி சிறுவர்கள் ஆற்றுகை செய்வதைக் காண அந்த உயிரோட்டம் காண்பதில் மேலும் ஆவலாக உள்ளேன் (ஜமுனா 2021).

நாடகத்தின் குணமே ஒவ்வொரு நிகழ்வையும் புதுமை ப்படுத்துவதுதான். அது கைகூடி வந்திருப்பது தெரிகிறது.பாடல், இசை - நாடகத்திற்கு வரப்பிரகாசமாய் இருக்கிறது. நல்ல முயற்சி! வாழ்த்துகள் பிரதீபனும் சாய்ராமும் தங்களின் நெளிப்பு சுழிப்புகளில் அரங்கவெளியைக் கண்ணுன் கொண்டுவருவது சிறப்பு. பாடல், நாடகக் கருத்தை ஆற்றின் இழுப்பைப்போல் நம்மை இழுத்துச் சென்றது அழகு! நீங்கள் இசை என்பது கூடுதல் மகிழ்ச்சி! (மு. ராமசாமி,2021)

மரண சான்றிதழ் எனும் நாடகம் ZOOM வழியாக பார்க்க கிடைத்தது. கணவனைத்தொலைத்த மனைவியாக நடித்தவர் கைதேர்ந்த நடிகை என்பதை நிரூபித்திருக்கிறார். காணாமல் போன கணவனை தேடி அலையும் மனைவியாக அந்த பாத்திரமாகவே மாறி நடித்திருக்கிறார். நாடகத்தினை பார்க்கும் போது அவர் நடித்ததை போல இல்லை. அந்த கதா பாத்திரமாக மாறிவிட்டார் என்பதே நிதர்சனம். வாழ்த்துக்கள் நீண்ட நாட்களுக்கு பின்னர் நல்லதொரு நாடகத்தை பார்க்க கிடைத்தமை மகிழ்ச்சி. (பாபுஜீ ,2021).

வண்டியும் தொந்தியும் எனும் நாடகம் முதல் முதலாக சூம் ஊடாக பார்க்க கிடைத்தது. இது கதிரையிலிருந்து வயிறு வளர்க்கும் (தொந்தி) அதிகாரிகள் பற்றியது. நாடகத்தில் நடித்த இருவருமே பல அதிகாரிகளின் செயற்பாடுகளை நம் கண்முன்னே கொண்டு வந்திருந்தனர். இந்த நாடகத்தினை பார்வையிட வேண்டும் என்பதற்காக முல்லைத்தீவை சேர்ந்த ஒரு மாணவி, தனது வீட்டில் கவரேஜ் போதாமையால் இரவு 7 மணிக்கு உறவினர் வீடொன்றுக்கு சென்று அங்கிருந்து நாடகத்தினை முழுமையாக பார்த்து அதன் பின்னர் நாடகம் தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் கலந்து தனது கருத்தை தெரிவித்திருந்தார். அவ்வளவு தூரத்திற்கு நாடகத்திற்கான வரவேற்பு கிடைத்திருந்தது. சூம் ஊடாக நாடகத்தினை பார்வையிடும் போது கவரேஜ் பிரச்சனை, குறித்த நேரத்திற்கு சூம் செயலியை பயன்படுத்தி உள்நுழைவது என்பவற்றில் சிலருக்கு சிக்கல்கள் ஏற்பட்டு இருக்கலாம் கவரேஜ் பிரச்சனையால் சில தடவைகள் தடங்கல்கள் ஏற்பட்டன. அதனால் எதிர்வரும் காலங்களில் பேஸ்புக் யூடியூப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களில் நேரலையாகவோ அல்லது ஒளிப்பதிவு செய்து பதிவேற்றுவது தொடர்பில் செயற்திறன் அரங்கு கவனம் செலுத்த வேண்டும் என எதிர் பார்க்கிறோம். (மயூரப்பிரியன்.எஸ் 2021)

‘பாட்டி’ மெய்நிகர் நாடக ஆற்றுகையின் மூலம் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ்குடும்பங்கள் தாயகத்தோடு மீண்டும் கிடைத்த தொடர்பு காரணமாக இணையவழி தொலைக்காட்சியான பாமுகத் தொலைக்காட்சியுடன் இணைந்து பல்வேறு நாடுகளிலும் இருந்து சிறார்களை இணைத்து இளைய தலைமுறைக்கு இணையவழி நாடகப் பயிலரங்கை 2021 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆந்தப்பயிற்சியின் இறுதியில் பாட்டி நாடகத்தை ஐந்து நாடுகளில் இருந்து அவரவர் வீடுகளில் ஆற்றுகை செய்வதன் ஊடாக மெய்நிகர்வழி ஆற்றுகை செய்தார்கள்;. ஆந்த ஆற்றுகையை பாமுக இணையத் தொலைக்காட்சி வழி ஞுழுழுஆ செயலி மூலம் ஒளிபரப்பினார்கள். ஆதன் பின்னர் இணையவழி தனிநடிப்பு பயிற்சியும் நடத்தப்பட்டது. இணையவழி

தனிநடிப்பு போட்டியும் நடத்தப்பட்டது.

நாடக செயற்பாட்டாளர்கள் மாற்று நிலையினை தேடிக்கொண்டதன்அடிப்படையில் இணையவழிச்சாத்தியத்தின் அடிப்படையில் சூம்(ஞுழுழுஆ) செயலியின் ஊடாக மெய்நிகர் வெளியினை பயன்படுத்தி அளிக்கைகளுக்கான சாத்தியத்தினை திறந்துவிட்டிருக்கின்றனர். இப்பின்னனியில் மெய்நிகர் ஆற்றுகைகளினை செயல்திறன் அரங்க இயக்கம் ஜனவரி (2021) மாதத்தில் நிகழ்த்தியிருந்தது. செயல்திறன் அரங்க இயக்கமானது தொடர்ச்சியான செயற்பாட்டின் அடிப்டையில் இடர்காலத்தில் அளிக்கையினை மேற்கொள்கின்ற வகையில் அவ் நிறுவனத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற மெய்நிகர் அரங்க ஆற்றுகைகள் குறிப்பிடத்தக்கன (குமரன், 2023).

நாடக ஆர்வலர்கள் ஒருதளத்தில் சந்திப்பதற்கும் கருத்துக்களை பகிர்ந்துகொள்வதற்குமான களமாக மெய்நிகர் அரங்கவெளி அமைகின்றமை நாடக அளிக்கையினை உயிர்ப்புடன் வெளிப்படுத்துக்கொள்வதற்கான சூழ்நிலை காணப்படுகின்றது. இவ்வழிமுறையினை பேணிக்கொள்கின்ற வகையில் மிகக்கறுகிய ஆற்றுகையாளர்களைக் கொண்டு செயல்திறன் அரங்க நிறவனத்தினரால் மெய் நிகர் அளிக்கைகளினை மேற்கொண்டிருந்தனர். இது நாடக ஆர்வலர்களிற்கு மகிழ்ச்சி தருகின்ற செய்தியாக இருந்ததினை அளிக்கை நிறைவடைந்த பின்னர் நீண்டு சென்ற உரையாடலில் அவர்கள் முன்வைத்த கருத்துக்கள் மூலம் அறிந்துகொள்ள முடிந்தது. இத்தகைய செயற்பாடு அரங்கின் இருப்பிற்கான புதிய பொறிமுறையினை தேடுகின்ற முயற்சியின் ஒருவழிமுறையாககொள்ளமுடிவதுடன் அவ்வழிமுறையில் வெற்றிபெற்றதாகக் கருத்திக்கொள்ளலாம். வண்டியும் தொந்தியும் எனும் ஆற்றுகை ஜனவரி (2021) மாதம் 15ம் திகதி மற்றும் 21ம் திகதிகளில் நிகழ்த்தப்பட்டன. இதனைத் தொடர்ந்து ஏகாந்தம் எனும் வேடமுக ஆற்றுகையானது ஜனவரிமாதம் 30 ம்திகதி இடம்பெற்றது. வெளிநாட்டிற்கு பிள்ளைகளை அனுப்பிவிட்டு இங்கு தனித்திருக்கும் பெற்றோரது துயரினை இவ்வளிக்கை வெளிப்படுத்தியிருந்தது. இது துன்பியலான பதிவாக காணப்பட்டது. அடுத்து 'மரணச்சான்றிதழ்' எனும் ஓராள் ஆற்றுகையானது 31ம் திகதி ஜனவரிமாதம் நிகழ்த்தப்பட்டது. இவ்வளிக்கைள் முடங்கிப்போயிருந்த அரங்க அளிக்கைகளிற்கு புத்துயிர் ஊட்டிய நிகழ்வாகவே கொள்ளமுடியும் (குமரன், 2023).

### 5 . சவால்கள் மற்றும் மட்டுப்பாடுகள்

பிறமாவட்டங்கள் மற்றும் புலம்பெயர் சமூகங்களுக்குள் இருக்கும் இணைய அணுகல் மற்றும் தொழில்நுட்ப கல்வியறிவு போன்ற வேறுபாடுகள் சவால்களாக காணப்பட்டன..

உலகளாவிய பார்வையாளர்களுக்காக நேரடி மெய்நிகர்; நிகழ்ச்சிகளை வழங்கும் போது நேர மண்டல வேறுபாடுகள் சவாலாக இருந்தது.

மெய்நிகர் இடைவெளிகளில் பார்வையாளர்களின் தொடர்புகள் தமிழ் கலாச்சார அடையாளத்தை கொண்டவர்களையே அதிகளவு உறுதிப்படுத்தியிருந்தன. உலகப்பொதுவான உள்ளடக்கம் உருவாக்கப்படுவது சவாலானதாக இருக்கிறது.

தொழில்நுட்பத் தடைகள் குறிப்பாக எல்லா இடங்களிலும் இணைய வசதி சீரானதாக இல்லாததால் பெறும் அனுபவமும் அதற்கேற்ப வேறுபடுகின்றது. ஆற்றுகைகள் சிறு தாமத்துடன் சென்றடைகின்றன.

சிறந்த வீடியோ ஒளிபரப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தெளிவான ஆற்றுகைகளுக்கு வாய்ப்பாக இருக்கும்.

### 4.0 முடிவுரை

சூம் செயலியைப் பயன்படுத்தி தமிழ் நாடகக் குழுக்கள் தங்கள் மெய்நிகர் ஆற்றுகைகள் மூலம் பார்வையாளர்களை விரிவாக்கிக்கொள்ளலாம். மேய்நகர் ஆற்றுகைகள் தொழில்நுட்பத்தைப் புரிந்து கொண்டு அதற்காகவே தயாரிக்கப்பட வேண்டும். ஆக்கப்பூர்வமான கதைசொல்லல் நுட்பங்கள் மற்றும் வடிவங்களை முன்னிலைப்படுத்தப்பட வேண்டும். நிகழ்நேர பார்வையாளர்களின் பங்கேற்பு அல்லது

ஊடாடும் கதைசொல்லல் போன்ற ஈடுபாட்டின் புதிய வடிவங்களை அறிமுகப்படுத்தி, மெய்நிகர் ஆற்றுகைகள்; ஆக்கப்பூர்வமான எல்லைகளைத் தாண்ட முடியும் என்பது இதன்வழி உணரப்படுகின்றது. புவியியல் ரீதியாகப் பிரிந்திருந்தாலும், தமிழ்க் குடும்பங்களுக்குச் சொந்தமான சமூக உணர்வை வளர்ப்பதற்கு இந்த மெய்நிகர் அரங்கு உதவமுடிகிறது. இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்ற குடும்பங்களின் உணர்ச்சி மற்றும் கலாச்சார தாக்கம் இதனை உறுதிப்படுத்துகிறது.

மெய்நிகர் ஆற்றுகைகள் தனிமைப்படுத்தப்பட்ட தொற்றுநோய் காலத்தில் உணர்ச்சிபூர்வமான ஆதரவு, மற்றும் கலாச்சார உறுதிப்பாட்டின் ஒரு வடிவமாக செயல்பட்டிருக்கின்றன. தமிழ் அரங்கப்பரப்பில் மெய்நிகர் நாடகங்கள் தமது தொழில்முறை அரங்க வளர்ச்சியில் ஒரு படிக்கல்லாக அமையும் திறன் கொண்டதாகும். இதனால் மெய்நிகர் ஆற்றுகைகள் தொடர்ச்சியாக நிகழத்தப்படுவதால் அரங்கு 'Perfomative' நிலைக்கு முன்னகர முடியும்.

## References

Matsumoto, R. (2017). Variations on theater and audiovisual. *Repertoire,* (28), 47-67. Retrieved From https://doi.org/10.9771/r.v0i28.24998

Kozinn, S. (2021). Theatre's On-Screen Persona: Cornerstone Theater's Highland Park Is Here: Stories from a Changing Barrio. *TDR: The Drama Review, 64*(4), 172–178. Retrieved From doi:10.1017/S1054204321000617

Lavender, A. (2006). Theatre And Technology. *MODERNBRITISH*, 551.

Kozinn, S. (2021). Theatre's On-Screen Persona: Cornerstone Theater's Highland Park Is Here: Stories from a Changing Barrio. *TDR: The Drama Review, 64*(4), 172–178. Retrieved From doi:10.1017/S1054204321000617

Jacobson, K. (2020). Theatre Companies Are Pushing Storytelling Boundaries with Online Audiences Amid COVID-19. *The Conversation*, 22.

Chatzichristodoulou, M., Brown, K., Hunt, N., Kuling, P., & Sant, T. (2022). Covid-19: theatre goes digital–provocations. *International Journal of Performance Arts and Digital Media, 18*(1), 1-6.

Rurale, A., Azzolini, M., Ivanova, D., & Fagundes, T. (2020). *The Impact of Covid-19 on the Performing Arts Sector*.

Tēvāṉant, Ti. (2021). Kooththarangam Magazine. *Scribd.*

Thulasi Muthulingam. (2021). Kūttaraṅkam Cañcikai: Virtual Performance: Timely Innovation. *Scribd. 32*, 22.

Kumaraṉ. Es. Ri. (2021). Kūttaraṅkam Cañcikai: Meynikar Araṅkil Pārppōrai Makiḻvitta Aḷikkaikaḷ. *Scribd. 32*, 22-23. [குமரன். எஸ். ரி. (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: மெய்நிகர் அரங்கில் பார்ப்போரை மகிழ்வித்த அளிக்கைகள். Scribd. 32, 22-23.]

Jamuṉā Intirakumār. (2021). Kūttaraṅkam Cañcikai: Pāṭṭi Vantiṭṭā Eṅkaṭa Pāṭṭi Vantiṭṭā. *Scribd. 32*, 25-26. [ஜமுனா இந்திரகுமார். (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: பாட்டி வந்திட்டா எங்கட பாட்டி வந்திட்டா. Scribd. 32, 25-26.]

Rāmacāmi. Mu. (2021). Kūttaraṅkam Cañcikai: Meynikar Nāṭakam Kaikūṭivantirukkiṟatu. *Scribd. 32*, 24. [ராமசாமி. மு. (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: மெய்நிகர் நாடகம் கைகூடிவந்திருக்கிறது. Scribd. 32, 24.]

Pāpujī, Mu. (2021). Kūttaraṅkam Cañcikai: Maraṇac Cāṉṟitaḻ Nallatoru Nāṭakam. *Scribd. 32*, 24. [பாபுஜீ, மு. (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: மரணச் சான்றிதழ் நல்லதொரு நாடகம். Scribd. 32, 24.]

Mayūrappiriyaṉ, Es. (2021). Kūttaraṅkam Cañcikai: Nāṉ Pārtta Mutal Meynikar Nāṭakam. *Scribd. 32*, 24. [மயூரப்பிரியன், எஸ். (2021). கூத்தரங்கம் சஞ்சிகை: நான் பார்த்த முதல் மெய்நிகர் நாடகம். Scribd. 32, 24.]